பண்பாடு-மக்கள் தொடர்பகம்
லொயோலா கல்லூரி வளாகம், சென்னை 600 034
நடத்திய

## மக்கள் சந்திப்பு-2001

# தேர்தல் பிரச்சாரத்திற்கு முந்திய கருத்துக் கணிப்பு

presentation of significant findings
on 01.02.2001

A Survey cum Research in Collaboration with
Department of Visual Communication, Loyola College
LISOR, Loyola College

# பண்பாடு-மக்கள் தொடர்பகம்

*லொயோலா கல்லூரி வளாகம், சென்னை 600 034*

*நடத்திய*

# *மக்கள் சந்திப்பு-2001*

## தேர்தல் பிரச்சாரத்திற்கு முந்திய கருத்துக் கணிப்பு

பண்பாடு மற்றும் வெகுசனத் தொடர்புச் சாதனங்களின் தளங்களில் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், ஆய்வுகள், பயிற்சிகள், கல்வித்திட்ட உருவாக்க முயற்சிகள் வாயிலாக மக்களுக்கான தொடர்புச் சாதனங்களை முன்னெடுத்துச் செல்வதிலும் 1983 முதல் பண்பாடு – மக்கள் தொடர்பகம் ஈடுபட்டு வருகிறது.

தொடர்புசாதனங்களின் சமூக – உளவியல் தாக்கம் குறித்து மேற்கொண்டு வரும் தொடர் ஆய்வுகளின் ஓர் அம்சமாக, இன்னும் ஓரிரு மாதங்களில் தமிழ்நாடு சந்திக்கவிருக்கும் சட்டமன்றத் தேர்தலை ஒட்டி மக்களின் உணர்வு வெளிப்பாடுகளை நேரடியாகப் பதிவு செய்யப் பண்பாடு – மக்கள் தொடர்பகம் களமிறங்கியது. லொயோலாக் கல்லூரியின் காட்சித் தகவலியல் துறையும் லொயோலா சமூக அறிவியலாய்வு மையமும் (LISOR) இம் முயற்சியில் இணைந்து கொண்டன.

பண்பாடு – மக்கள் தொடர்பகத்தின் இயக்குநரும் காட்சித் தகவலியல் பேராசிரியருமான *ச. ராஜநாயகம்* தலைமையில் ஒன்பது பேர் அடங்கிய கருத்துக் கணிப்புக் குழுவானது தமிழ்நாட்டின் *30 மாவட்டங்களுக்கும்* நேரடியாகச் சென்று மக்களைச் சந்தித்தது. கட்சி, மதம், சாதி முதலான எந்த அமைப்பையும் சாராமல், தமிழக மக்களின் சார்பாக நின்று, நடுநிலையோடு இந்தச் சந்திப்புக்கள் நிகழ்ந்தன.

தமிழகத்தில் தேர்தல் திருவிழா களை கட்டத் தொடங்கி, *அரசியல் கட்சிகளால் மக்கள் திசை திருப்பப் படுவதற்கு முன்னதாக, அதே சமயம் மக்கள் மத்தியில் தேர்தல் பற்றிய எதிர்பார்ப்பு ஆரம்பித்திருக்கும் நிலையில்,* புற – அக அழுத்தங்கள் ஏதுமின்றி மக்கள் தமது கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துவதற்குப் பொருத்தமான தருணமாகிய *ஜனவரி* மாதத்தில் இரண்டு கட்டங்களாகச் சந்திப்பு நடைபெற்றது. இதன் வழியாக, தமிழகத்தின் இன்றையச் சமூக அரசியல் பிரச்சனைகள் பற்றிய மக்களின் பார்வைகளையும் கருத்துக்களையும் விமர்சனங்களையும் ஆய்வுக் குழு சேகரித்து வந்துள்ளது.

### சமூக–உளவியல் அணுகுமுறை

வெகுசனத் தொடர்பு ஊடகங்களாலும் கருத்துக்கணிப்பு நிறுவனங்களாலும் வழக்கம் போல மேற்கொள்ளப்படும் புள்ளிவிவரக் கருத்துக் கணிப்புக்கள் போலில்லாது, சமூக – உளவியல் உண்மைகளுக்கேற்ப ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தி, நேரடி உரையாடல் வாயிலான *கருத்துப் பகிர்வின் மூலமாகத்* தரவுகளைச் சேகரித்ததோடு, மக்களைப் பாதிக்கும் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக உணர்ச்சிப் பூர்வமான கருத்துக்கள் ஒளிநாடாக்களில் பதிவும் செய்யப்பட்டன. இத்தகைய *ஒருங்கிணைந்த* செயற்பாடானது தேர்தல் கணிப்புக்களைப் பொருத்த வரையில் புதியதொரு ஆய்வு அணுகுமுறையாகும்.

### மக்கள் சந்திப்பின் நோக்கங்கள்

*முதலாவது:* மக்களை வெறும் தரவுகளாக மட்டும் கருதி, அவர்களிடமிருந்து செய்தியைக் "கறக்கும்" அணுகுமுறைக்குப் பதிலாக, மக்களை அணுகி, அவர்கள் தங்கள் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்த ஏதுவான *சூழலை* அமைத்துத் தருவது.

*இரண்டாவது:* சிந்தனையைத் தூண்டும் வினாப்பொறிகளை விதைப்பதன் மூலம் தமிழக மக்கள் வெளிக்காட்டிய பிரச்சனைகள் பற்றிய *தொடர் விவாதங்களை* அவர்கள் மத்தியிலேயே இயங்கச் செய்யக் களம் அமைத்துக் கொடுப்பது.

*மூன்றாவது:* மக்களின் விவாதங்களையும் விமர்சனங்களையும் மீளவும் அவர்களிடமே கொண்டு சேர்த்து, அதன் மூலம் இன்றைய அரசியல், சமுதாய அவலங்கள் பற்றிய விழிப்புணர்வைக் கூர்மைப்படுத்தி, எதிர்வரும் தேர்தலில் அதைப் *பிரதிபலிக்கச்* செய்வது. அதற்காக, பத்திரிக்கைகள், தொலைக்காட்சிகள் முதலான வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் வழியாக மட்டுமல்லாது, ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், அரசு சாராத தன்னார்வக் குழுக்கள் வழியாகவும் இந்த முயற்சிகளைத் தொடர்வது.

*நான்காவது:* மக்களது நியாயமான எதிர்பார்ப்புகளை அரசியல் கட்சிகளிடம் எடுத்துச் செல்வதன்மூலம் மக்களது அபிலாசைகளைப் புரிந்து கொண்டு, *பொறுப்புணர்வோடு* அரசியற்கட்சிகள் தேர்தலை அணுகத் தூண்டுவது.

## தடைகளும் தடங்களும்

பண்பாடு – மக்கள் தொடர்பகம் மேற்கொண்ட தமிழகம் தழுவிய ஆய்வுப் பயணத்தின்போது தூக்கலாகத் துலங்கிய சில சிறப்பு அம்சங்கள், *தமிழக மக்களுக்கே உரித்தான* உளப்போக்கின் தன்மைகளைக் கண்டறிய உதவின.

01) மொத்த வாக்காளர் தொகையில் ஐம்பது சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் *பெண்களைப்* பொருத்தவரையில், மிகப் பெரும்பாலானோர் அவரவர் குடும்பத்திலுள்ள ஆண்களின் செல்வாக்குக்கு உட்பட்ட வகையிலேயே கருத்துக்களை வெளியிட முன்வருகிறார்கள். நகரம் – கிராமம் என்ற வேறுபாடின்றி எல்லாப் பகுதிகளிலும் இப் போக்குக் காணப்பட்டாலும், கிராமப்புறப் பெண்கள் சற்றுத் துணிச்சலாகவும் யதார்த்தமாகவும் பேசுகின்றனர்.

02) நகர்ப்புற நடுத்தர மக்களிடம், குறிப்பாக *மாத ஊதியம் பெறும்* நடுத்தர மற்றும் மேல்தட்டு மக்களிடமும், பிரச்சனைகளை வெளிக் கொண்டு வருவதில் *தேவைக்கும் அதிகமான* தயக்கம், பாதுகாப்பின்மை, முன்னெச்சரிக்கை என்பன நிறையவே உள்ளன. இவர்களை விட, கிராமங்களில் வாழும் சாதாரண மற்றும் அடித்தட்டு மக்கள் வெளிப்படையான, தெளிவான, நேரடியான பதில்களை அளிக்க முன் வருகின்றனர்.

03) தமிழகத்திலுள்ள சமூக அரசியல் பிரச்சனைகள் தொடர்பாக அறிவுப்பூர்வமான ஆய்வறியும் தன்மையை விட "*உணர்வுப்பூர்வமான சிந்தனை*" வெளிப்பாடே மக்களிடம் அழுத்தமான வகையில் அமைந்துள்ளது. தமிழக மக்களது உணர்வுப்பூர்வமான இச்சிந்தனை வெளிப்பாட்டைச் சரிவரக் கணிக்கத் தவறியதே, முந்தைய தேர்தல் கணிப்புக்கள் யதார்த்த நிலவரத்தை எடுத்துக்காட்டாமல் இருந்தமைக்கு முக்கியமானதொரு காரணம்.

04) தமிழக அளவிலான பிரச்சனைகளை விட, அந்தந்தத் தொகுதி / கிராமத்திலுள்ள பிரச்சனைகளிலேயே மக்களின் பெரும் கவனம் குவிந்துள்ளது. தங்களை நேரடியாகவும் உடனடியாகவும் பாதிக்கக்கூடிய பிரச்சனைகளுக்கே மக்கள் முக்கியத்துவம் அளிப்பதே உளவியல் யதார்த்தமாக உள்ளது.

05) எந்தவொரு அரசியல் தலைவரையும் விட, மிக அதிக அளவில் கவனத்தை ஈர்ப்பவர்கள் *நடிகர்கள்.* சுவரொட்டிகள், விளம்பரப் பலகைகள், உருவெட்டுக்கள், ரசிகர் மன்றப் பெயர்ப் பலகைகள் என எங்கும் நீக்கமற நிறைந்துள்ளார்கள். (நடிகர்களின் அரசியல் தாக்கம் பற்றிய கருத்துக்கள் ஆய்வினுள் இடம்பெற்றுள்ளன).

06) வரும் தேர்தலில் *கூட்டணி ஆட்சியே* (coalition government) சாத்தியமாகும் என்பது பெருவாரியான வாக்காளர்களின் கருத்து என்பதோடு, அத்தகைய ஆட்சியை ஏற்றுக்கொள்ளும் *பக்குவத்திலும்* வாக்காளர்கள் உள்ளது அழுத்தந் திருத்தமாகப் புலப்படுகிறது.

# பண்பாடு-மக்கள் தொடர்பகம்

லொயோலா கல்லூரி வளாகம், சென்னை 600 034

நடத்திய

# மக்கள் சந்திப்பு-2001

## தேர்தல் பிரச்சாரத்திற்கு முந்திய கருத்துக் கணிப்பு

## ஆய்வு முடிவுகள் பற்றிய விளக்கம்

வாக்காளர் பின்னணி

பண்பாடு–மக்கள் தொடர்பகம் எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலையொட்டி மக்கள் சந்திப்பினைத் தமிழ்நாட்டிலுள்ள 30 மாவட்டங்களிலும் நடத்தியது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறைந்தது இரு நகரங்கள், மூன்று கிராமங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. வினாத்தொகுப்பு மற்றும் ஒளிப்பேழைப் பதிவு இவற்றில் பங்கேற்றோரின் மொத்த எண்ணிக்கை 2250. இதில் 25 சதவீதம் தனித் தொகுதிகள் (Reserved), 75 சதவீதம் பொதுத்தொகுதிகள். பங்கேற்ற வாக்காளரில் 90 சதவீதம் ஆண்கள், 10 சதவீதம் பெண்கள். இவர்களில் முதற்தடவை வாக்களிப்பவர்கள் 9.4 சதவீதமாகவும், 40 வயது வரையுள்ளோர் 62.6 சதவீதமாகவும், 40 வயதிற்கும் மேற்பட்டோர் 28.0 சதவீதமாகவும் இருந்தனர். மதரீதியாக, இந்துக்கள் 83.8 சதவீதத்தினரும், இஸ்லாமியர் 8.6 சதவீதத்தினரும், கிறிஸ்தவர்கள் 5.8 சதவீதத்தினரும், பிற மதத்தவர்கள் 1.9 சதவீதத்தினரும் பங்கேற்றனர்.

## கட்சி அரசியல்

### தமிழகம் இன்று சந்திக்கும் முக்கிய பிரச்சனைகள்

தமிழகம் இன்று சந்திக்கும் முக்கிய பிரச்சனைகளில் பெருவாரியாக அன்றாட வாழ்வை நேரடியாகப் பாதிக்கக்கூடிய பிரச்சனைகளே முக்கியத்துவம் பெறுகின்றன. எனினும், முதலில் குறிப்பிடப்படும் பிரச்சனைகளில் சாதி–மதக் கலவரங்கள் – குறிப்பாக, சாதிக் கலவரங்கள் – சற்று அதிக எண்ணிக்கையில் உள்ளது.

| பிரச்சனைகள் | வாக்காளர்கள் (%) |
|---|---|
| சாதி,மதக் கலவரங்கள் | 23.8 |
| விலைவாசி உயர்வு, ரேஷன் விநியோகம் சீரின்மை | 20.4 |
| அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படாமை | 14.8 |
| வேலையில்லாத் திண்டாட்டம், தொழில் வளர்ச்சியின்மை | 13.2 |
| பணப்புழக்கம் இல்லை | 7.3 |
| விவசாயிகள் பிரச்சனை | 4.8 |
| இலஞ்சம், ஊழல் | 2.8 |
| வேறு பிரச்சனைகள் | 9.0 |
| பிரச்சனைகள் எதுவும் இல்லை | 4.0 |

# 2001 தேர்தல் கணிப்பு

## கட்சிவாரியாக கணிப்பு

நடைபெறவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் – 35.1% வாக்காளர்கள் தி.மு.கவுக்கும், 32.7% அ.தி.மு.கவுக்கும் வாக்களிக்கப்போவதாக விருப்பம் தெரிவித்துள்ளனர்.

| கட்சி | வாக்காளர்கள் (%) |
|---|---|
| தி.மு.க | 35.1 |
| அ.தி.மு.க | 32.7 |
| பி.ஜே.பி | 3.8 |
| காங்கிரஸ் | 2.6 |
| த.மா.கா | 2.0 |
| பா.மா.க | 1.6 |
| சி.பி.ஐ, சி.பி.ஐ.(எம்) | 1.3 |
| ம.தி.மு.க | 0.6 |
| எம்.ஜி.ஆர். அ.தி.மு.க | 0.6 |
| புதிய நீதிக்கட்சி | 0.6 |
| விடுதலைச் சிறுத்தைகள் | 0.5 |
| புதிய தமிழகம் | 0.5 |
| மக்கள் தமிழ் தேசம் | 0.2 |
| சுயேட்சை | 0.4 |
| பிற கட்சிகள் | 1.2 |
| வாக்களிக்கப்போவதில்லை | 3.6 |
| தீர்மானிக்கவில்லை | 12.4 |

மேல் அட்டவணையிலுள்ள முடிவுகளைச் சென்ற தேர்தலோடு ஒப்பிடும் போது இந்த முறை நடைபெறவிருக்கும் தேர்தலில் பிரதானமான இரு கட்சிகளான தி.மு.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் இடையிலான வாக்கு வேறுபாடு மிகக் குறுகியதாக உள்ளது. தி.மு.க. சென்ற தேர்தலில் பெற்றிருந்த ஆதரவு 56.3 சதவீதத்திலிருந்து இம்முறை 35.1 சதவீதமெனக் குறைந்து காணப்படும் அதேவேளை, அ.தி.மு.க.வின் ஆதரவானது 22.6 சதவீதத்திலிருந்து 33.7 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதேபோல – தி.மு.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் இடையேயான ஆதரவு வித்தியாசமானது சென்ற தேர்தலில் 32.7 சதவீதமாக இருந்து இம்முறை வெறும் 1.4 சதவீதமாக மிகப் பெருமளவில் குறைந்து காணப்படுகின்றது (1996–முடிவுகளுக்கு, *கட்சி ரீதியான ஆதரவு – ஓர் ஒப்பீடு* என்ற பகுதியைக் காண்க).

எனவே, வரும் தேர்தல் பிரதான இரு கட்சிகளுக்கும் அதிவலுவான போட்டியினைத் தருவதாக இருப்பதோடு, ஆளும் கட்சியான தி.மு.க.வுக்குப் பாதகமான ஆதரவுச் சரிவையும், எதிர்க் கட்சியான அ.தி.மு.க.வுக்குச் சாதகமாக ஆதரவு அதிகரிப்பையும் இனங்காட்டுகிறது. அதேவேளை, வரும் தேர்தலில் வாக்களிக்கப்போகும் கட்சியைப்பற்றி தற்போது தீர்மானம் செய்யாமல் இருக்கும் 13.4 சதவீதமானோரின் முடிவுகளும் இங்கு முக்கியத்துவம் வாய்ந்த மாற்றத்திற்கு வழி காட்டும்.

ஒட்டு மொத்தத்தில், வாக்காளரின் ஆதரவைப் பொறுத்தளவில் தி.மு.க அ.தி.மு.கவை விட சிறிதளவு முன்னணியில் இருந்தாலும் மற்ற காரணிகளை ஆராயுமிடத்து அ.தி.மு.க.வுக்கு ஆதரவான போக்குகள் வளர்ந்து வந்துள்ளன.

## வயது அடிப்படையிலான ஆதரவு

எதிர்வரும் தேர்தலில் முதல்தடவையாக வாக்களிக்கப்போரின் அதிகமான ஆதரவை அ.தி.மு.க.வும், ஏனைய வாக்காளர்களின் ஆதரவை தி.மு.க.வும் பெறுகின்றன.

| கட்சி | முதற்தடவை வாக்களிப்போர் (%) | 40வயது வரையுள்ள வாக்காளர்கள் (%) | 40 வயதுக்கும் மேலுள்ள வாக்காளர்கள் (%) |
|---|---|---|---|
| தி.மு.க. | 29.2 | 36.6 | 34.4 |
| அ.தி.மு.க | 37.7 | 34.0 | 27.8 |
| வாக்களிக்கப்போவதில்லை | 6.6 | 3.0 | 4.1 |
| தீர்மானிக்கவில்லை | 7.5 | 11.5 | 15.8 |
| பிற கட்சிகள் | 19.0 | 14.9 | 17.9 |

## தொழில் அடிப்படையிலான ஆதரவு

தொழில் அடிப்படையிலான ஆதரவைக் கருத்திற்கொண்டால், அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் அதாவது மாதஊதியம் பெறும் வாக்காளர்களின் அதிக ஆதரவைத் தி.மு.க. பெற்றிருக்கின்ற அதேவேளை, விவசாயிகள் மற்றும் விவசாயக்கூலிகளது ஆதரவைப் பெறுவதில் அ.தி.மு.க. முன்னிலை வகிக்கின்றது. ஏனைய தொழிலாளர்களின் ஆதரவைப் பொருத்தவரையில் இரு பிரதான கட்சிகளிடையேயும் பெரிய அளவிலான வேறுபாடு காணப்படவில்லை.

| கட்சி | 1(%) | 2(%) | 3(%) | 4(%) | 5(%) | 6(%) |
|---|---|---|---|---|---|---|
| தி.மு.க | 32.2 | 34.0 | 41.4 | 35.7 | 33.3 | 35.9 |
| அ.தி.மு.க | 35.0 | 33.0 | 29.3 | 38.0 | 38.1 | 27.2 |
| பிறகட்சிகள் | 20.8 | 15.6 | 16.4 | 4.9 | 14.3 | 21.8 |
| வாக்களிப்பதில்லை | 4.0 | 4.4 | 2.9 | 0.0 | 0.0 | 1.0 |
| தீர்மானிக்கவில்லை | 8.0 | 13.0 | 10.0 | 21.4 | 14.3 | 14.1 |

1 – விவசாயிகள், விவசாயக்கூலிகள்
2 – வியாபாரம் மற்றும் சொந்தத் தொழில் செய்பவர்
3 – அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றுபவர்
4 – இல்லத்தரசிகள் (housewives)
5 – மாணவர்கள்
6 – வேறுதொழில் செய்பவர்கள் மற்றும் வேலையில்லாதவர்கள்

மேலுள்ள பட்டியலின் அடிப்படையில், தமிழகம் இன்று சந்திக்கும் முக்கியப் பிரச்சனைகளாக வாக்காளர்கள் இனங்காட்டும் சாதி–மதக் கலவரங்கள், விலைவாசி உயர்வு, ரேஷன் விநியோகம் சீரின்மை, அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படாமை, வேலைவாய்ப்பில்லாத சூழல், பணப்புழக்கம் இல்லாமை என்பன அ.தி.மு.க.வுக்குச் சாதகமான ஆதரவைத்தரும் விவசாயிகள், விவசாயக்கூலிகள், வியாபாரிகள், இல்லத்தரசிகள், மாணவர்கள் ஆகிய தரப்பினரை இலக்கு வைத்திருப்பதையும், இவர்களையே இப்பிரச்சனைகள் அதிகம் பாதிப்பதையும் இங்குச் சுட்டிக் காட்டலாம்.

அதேவேளை, தி.மு.க.வின் பலமான வாக்குவங்கியான அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் பணியாளர்கள் இப் பாதிப்புக்களிலிருந்து மற்றைய தொழிலாளர்களைவிட சற்றே விலகி நிற்பதையும், தி.மு.க.அரசு அவர்களுக்கு அளித்துவரும் ஊதிய உயர்வுகளும் சலுகைகளும் தி.மு.க.வின் வாக்குவங்கியைக் கட்டிக்காத்து நிற்பதையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

## கல்வித்தகுதி அடிப்படையிலான ஆதரவு

கல்வித்தகுதி அடிப்படையிலான ஆதரவினைப் பொருத்த அளவில், படிக்காத மக்களிடமும் ஆரம்பக்கல்வியை மட்டுமே எட்டியோரிடமும் அ.தி.மு.க. தனது செல்வாக்கினை கடந்த காலங்களைப் போலவே தக்க வைத்துள்ளது. அதேவேளை, நடுநிலை மற்றும் உயர்கல்வி கற்றவர்களிடம் தி.மு.க.வின் செல்வாக்கு உயர்ந்து காணப்படுகின்றது.

| கட்சி | படிக்காதவர்கள் மற்றும் 5~ம்வகுப்பு வரை(%) | 6~ம்வகுப்பு முதல் 12~ம்வகுப்புவரை(%) | 12~ம்வகுப்புக்குமேல் (%) |
|---|---|---|---|
| தி.மு.க | 26.8 | 36.8 | 37.0 |
| அ.தி.மு.க | 42.4 | 31.6 | 27.5 |
| பிறகட்சிகள் | 14.7 | 15.5 | 19.7 |
| வாக்களிப்பதில்லை | 4.4 | 3.8 | 2.8 |
| தீர்மானிக்கவில்லை | 11.7 | 12.3 | 13.0 |

### மதச் சிறுபான்மையினரின் ஆதரவு

மத ரீதியான சிறுபான்மை வாக்காளர்களைப் பொறுத்தவரையில் முஸ்லீம்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் ஆதரவைப் பெறுவதில் தி.மு.க.வை விட அ.தி.மு.க. முன்னிலையில் காணப்படுகின்றது. என்றாலும், கிறிஸ்தவர்களின் வாக்குகளில் தி.மு.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் இடையே பெரிய அளவிலான வேறுபாடில்லாததைக் காணமுடிகிறது.

| கட்சி | முஸ்லீம்கள் (%) | கிறிஸ்தவர்கள் (%) |
|---|---|---|
| தி.மு.க | 30.9 | 29.2 |
| அ.தி.மு.க | 47.4 | 32.3 |
| பா.ம.க | 0.0 | 1.5 |
| த.மா.கா | 3.1 | 1.5 |
| காங்கிரஸ் | 2.1 | 4.6 |
| பி.ஜே.பி. | 0.0 | 1.5 |
| ம.தி.மு.க | 1.0 | 3.1 |
| சிபிஐ, சிபிஐ(எம்) | 1.0 | 1.5 |
| புதிய தமிழகம் | 0.0 | 4.6 |
| எம்.ஜி.ஆர் அதிமுக | 0.0 | 1.5 |
| சுயேட்சை | 1.0 | 0.0 |
| பிறர் | 0.0 | 1.5 |
| வாக்களிப்பதில்லை | 6.2 | 1.5 |
| தீர்மானிக்கவில்லை | 7.2 | 15.4 |

## சாதீய ரீதியான ஆதரவு

### தனி / பொது தொகுதிகளில் கட்சிகளுக்கு ஆதரவு

தனி மற்றும் பொதுத் தொகுதிகளில் கட்சிகளுக்கான ஆதரவைக் கருதினால் இரண்டு நிலைகளிலும் தி.மு.க.வே அதிக ஆதரவைப் பெற்றுள்ளது. இதன் மூலம் தாழ்த்தப்பட்டோருக்கென ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் அ.தி.மு.க வை விட தி.மு.க. முன்னிலை வகிப்பதைக் காணலாம்.

| கட்சி | தனித்தொகுதி வாக்காளர்கள் (%) | பொதுத்தொகுதி வாக்காளர்கள் (%) |
|---|---|---|
| தி.மு.க | 37.6 | 34.3 |
| அ.தி.மு.க | 33.8 | 32.3 |
| பா.ம.க | 3.8 | 0.8 |
| த.மா.கா | 1.4 | 2.3 |
| காங்கிரஸ் | 2.4 | 2.6 |
| பி.ஜே.பி. | 3.1 | 4.0 |
| ம.தி.மு.க | 1.7 | 0.2 |
| சிபிஐ, சிபிஐ(எம்) | 0.7 | 1.5 |
| புதிய தமிழகம் | 0.7 | 0.5 |
| புதிய நீதிக்கட்சி | 0.3 | 0.7 |
| மக்கள் தமிழ் தேசம் | 0.3 | 0.2 |
| விடுதலைச் சிறுத்தைகள் | 1.7 | 0.1 |
| பார்வர்டு பிளாக் | 0.0 | 0.2 |
| எம்.ஜி.ஆர் அதிமுக | 0.0 | 0.8 |
| சுயேட்சை | 0.7 | 0.4 |
| பிறர் | 0.3 | 1.3 |
| வாக்களிப்பதில்லை | 3.1 | 3.8 |
| தீர்மானிக்கவில்லை | 8.0 | 13.8 |

## கட்சிகளுக்குச் சாதீய ரீதியான ஆதரவு

சாதீய ரீதியிலான ஆதரவினை கருதினால் – தாழ்த்தப்பட்டோர், நாடார், முதலியார், வன்னியர், யாதவர் ஆகியோருடைய ஆதரவைப் பெறுவதில் தி.மு.க. முன்னிலையிலும் – முக்குலத்தோர் மற்றும் ஏனைய சாதியைச் சார்ந்தவர்களிடம் அ.தி.மு.க. முன்னிலையிலும் காணப்படுகின்றன.

| | சாதீயப் பிரிவுகளில் வாக்காளர்கள் (%) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கட்சி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| தி.மு.க | 35.1 | 32.1 | 44.5 | 38.2 | 32.3 | 28.8 | 34.5 | 33.7 |
| அ.தி.மு.க | 33.0 | 28.6 | 26.3 | 26.8 | 22.6 | 40.8 | 34.5 | 34.9 |
| பா.மா.க | 1.1 | 1.8 | 0.0 | 10.6 | 3.2 | 0.0 | 0.0 | 0.2 |
| த.மா.கா | 1.6 | 3.6 | 1.5 | 0.8 | 9.7 | 2.4 | 1.7 | 1.9 |
| காங்கிரஸ் | 3.8 | 1.8 | 2.2 | 0.8 | 0.0 | 2.4 | 0.0 | 3.4 |
| பி.ஜே.பி | 2.7 | 3.6 | 5.1 | 4.1 | 9.7 | 3.2 | 1.7 | 3.6 |
| ம.தி.மு.க | 0.0 | 0.0 | 0.0 | 0.8 | 0.0 | 0.0 | 0.0 | 1.4 |
| சி.பி.ஐ, சி.பி.ஐ.(எம்) | 1.1 | 1.8 | 0.0 | 0.8 | 3.2 | 1.6 | 3.4 | 1.4 |
| விடுதலைச் சிறுத்தைகள் | 3.2 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| புதிய தமிழகம் | 3.2 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| புதிய நீதிக்கட்சி | 0.5 | 0.0 | 2.9 | 0.0 | 0.0 | 0.8 | 0.0 | 0.2 |
| மக்கள் தமிழ் தேசம் | 0.5 | 0.0 | 0.0 | 0.8 | 3.2 | 0.0 | 0.0 | 0.0 |
| பார்வார்டு பிளாக் | 0.0 | 1.8 | 0.0 | 0.0 | 0.0 | 0.8 | 0.0 | 0.0 |
| எம்.ஜி.ஆர். அ.தி.மு.க | 0.0 | 1.8 | 1.5 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 |
| பிற கட்சிகள் | 1.1 | 1.8 | 1.5 | 2.4 | 0.0 | 0.8 | 1.7 | 2.2 |
| வாக்களிக்கப்போவதில்லை | 4.3 | 1.8 | 6.6 | 5.7 | 3.2 | 0.8 | 5.2 | 2.7 |
| தீர்மானிக்கவில்லை | 8.6 | 19.6 | 8.0 | 8.1 | 12.9 | 17.6 | 17.2 | 13.3 |

1 – தாழ்த்தப்பட்டோர் 2– நாடார் 3. முதலியார், பிள்ளை, வெள்ளாளர், 4–வன்னியர் 5– யாதவர் 6– முக்குலத்தோர் 7–நாயுடு, ரெட்டி, 8– பிற

சாதீய ரீதியான கட்சிகளைப் பொருத்தவரையில், அவ்வச் சாதீயங்களுக்கான அரசியற்கட்சிகளாக தம்மை இனங்காட்டிக்கொள்பவர்கள் தமது பிரிவினரிடையே கொண்டுள்ள செல்வாக்கானது, சாதீய ரீதியான ஆதரவை – கூட்டணி ரீதியாக தி.மு.க.விடமும் அ.தி.மு.க.விடமும் கொண்டு சேர்க்கக்கூடியவையாக இருக்கின்றன.

எடுத்துக்காட்டாக: பா.ம.க. வன்னியர்களிடம் *10.6* % ஆதரவினையும், விடுதலைச்சிறுத்தைகள் மற்றும் புதிய தமிழகம் என்பன தலா *3.2* % தாழ்த்தப்பட்ட மக்களின் ஆதரவினையும், புதிய நீதிக்கட்சியானது முதலியார் மற்றும் வேளாளர்களின் *2.9* % ஆதரவினையும், மக்கள் தமிழ்தேசம் யாதவர்களின் *3.2* % ஆதரவினையும் கொண்டுள்ளன. இக்கட்சிகள் இணையப்போகும் கூட்டணிகளைப் பொருத்தே தேர்தல் வெற்றியின் சமன்பாடுகளும் மாற்றமடையும்.

அதேவேளை, இங்கும் எந்தக் கட்சிக்கு வாக்களிப்பதெனத் தீர்மானிக்காதவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு காணப்படுவதால், இவையும் இறுதிநேரச் சமன்பாடு மாற்றங்களுக்கு வித்திடும்.

## கட்சி ரீதியான ஆதரவு – ஓர் ஒப்பீடு

கட்சி ரீதியான ஆதரவானது சென்ற (*1996*) தேர்தலுடன் ஒப்பிட்டு நோக்கப்படுகின்றது. இதன்படி, சென்ற தேர்தலில் தி.மு.க.வுக்கு வாக்களித்தவர்களில் *54.2* சதவீதமானோரே தி.மு.க.வுக்கு இம்முறையும் வாக்களிக்கப் போவதாகக் கூற, அ.தி.மு.க.வுக்குச் சென்ற தேர்தலில் வாக்களித்தவர்களில் *78.4* சதவீதமானோர் தொடர்ந்து தாம் அ.தி.மு.க.வுக்கு வாக்களிக்கப்போவதாகத் தெரிவிக்கின்றனர். கீழுள்ள அட்டவணையானது *1996*–ல் குறிப்பிட்ட சில கட்சிகள் பெற்ற ஆதரவு, வரும் தேர்தலில் எவ்வாறு பிரியும் என்பதைக் காட்டுகிறது.

| கட்சிகள் | 96–ல் கட்சிகளுக்கு ஆதரவளித்தோர் இன்று பிரியும் வீதம் (%) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | திமுக | அதிமுக | தமாகா | காங்கிரஸ் | பிஜேபி | வாக்களிக்கவில்லை |
| திமு.க | *54.2* | *5.9* | *21.3* | *4.0* | *5.9* | *22.4* |
| அ.தி.மு.க | *18.6* | *78.4* | *17.0* | *12.0* | *17.6* | *27.6* |
| பா.மா.க | *0.8* | *1.6* | *0.0* | *0.0* | *0.0* | *0.0* |
| த.மா.கா | *1.9* | *0.0* | *19.1* | *0.0* | *0.0* | *1.7* |
| காங்கிரஸ் | *0.6* | *1.6* | *2.1* | *68.0* | *0.0* | *1.7* |
| பி.ஜே.பி | *3.5* | *2.0* | *4.3* | *0.0* | *76.5* | *1.7* |
| ம.தி.மு.க | *0.3* | *0.0* | *0.0* | *0.0* | *0.0* | *0.0* |
| சி.பி.ஐ, சி.பி.ஐ.(எம்) | *0.5* | *0.0* | *0.0* | *0.0* | *0.0* | *1.7* |
| பிறகட்சிகள் | *3.1* | *0.8* | *10.6* | *4.0* | *0.0* | *12.1* |
| வாக்களிக்கப்போவதில்லை | *3.9* | *2.7* | *2.1* | *0.0* | *0.0* | *8.6* |
| தீர்மானிக்கவில்லை | *12.6* | *7.1* | *23.4* | *12.0* | *0.0* | *22.4* |

மேலுள்ள பட்டியலின்படி, சென்ற முறை தி.மு.க.வுக்கு வாக்களித்தவர்களில் இம்முறையும் வாக்களிக்க விருப்பம் தெரிவிப்பவர்களின் வீழ்ச்சியானது அ.தி.மு.க.வுடன் ஒப்பிடும்போது பெரிய அளவில் பாதகமான அம்சமாக விளங்குகின்றது. அதேவேளை, தி.மு.க.வுக்குச் சென்ற முறை வாக்களித்தவர்களில் *18.6* சதவீதம் அ.தி.மு.க.வுக்கே இம்முறை தம் வாக்கு எனக் கூறுவதானது, தி.மு.க.விடம் அ.தி.மு.க. இழக்கும் *5.9* % ஆதரவை விட அதிகமாயிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், யாருக்கு வாக்களிப்பதெனத் தீர்மானிக்காதவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையிலும், தி.மு.க.வுக்கு *12.6* சதவீதம் பேரும் அ.தி.மு.க.வுக்கு *7.1* சதவீதம் பேரும் “மதில் மேல் பூனை”களாக உட்கார்ந்திருப்பதை ஒத்துள்ளனர். இங்கும் தி.மு.க.விற்குச் சென்றமுறை வாக்களித்தவர்களே அதிகமாக இருப்பது கவனிக்கத்தக்கது. இன்னும், சென்றமுறை வாக்களிக்காத ஆனால் இம்முறை வாக்களிக்கப்போவதாகச் சொல்பவர்களில். அ.தி.மு.க.வுக்கு வாக்களிப்போர் சற்று அதிகமாயும் (5.2% அதிகம்) உள்ளனர்.

ஏனைய கட்சிகளில், பி.ஜே.பி தனக்கு சென்றமுறை வாக்களித்தவர்களில் கணிசமான பங்கினரை (76.5 %) இன்னும் தனக்காதரவானவர்களாகவே தக்க வைத்திருக்கின்றது. ஆனால் த.மா.கா. சென்ற தேர்தலில் தனக்கு ஆதரவாக வாக்களித்தவர்களில் 19.1 சதவீதத்தினரையே இம்முறை தக்கவைக்க முடிந்திருக்கிறது. ஏனையவர்களில் பலர் தி.மு.க.வுக்கும் (12.3 %) அ.தி.மு.க.வுக்கும் (17%) ஆதரவளிக்கப்போவதாகக் கூற – பெரியதொரு "மதில் மேல் பூனை" நிலையிலுள்ள வாக்காளர்களையும் (23.4 %) த.மா.கா. இழுபறி நிலையில் வைத்திருக்கிறது.

## கட்சி உறுப்பினர் ரீதியான வாக்குகள்

கட்சி உறுப்பினர்களின் வாக்குகளைப் பொறுத்தவரையில் – 74.9 % தி.மு.க. உறுப்பினர்கள் தாம் தி.மு.க.வுக்கு வரும் தேர்தலில் வாக்களிப்பதாகக் கூற, அ.தி.மு.க. உறுப்பினர்களில் 91.4 % பேர் தாம் அ.தி.மு.க.வுக்கு ஆதரவைத் தொடர்ந்து தெரிவிக்கின்றனர்.

கட்சி உறுப்பினர்கள் (%)

| கட்சி | தி.மு.க. | அ.தி.மு.க | பிறகட்சிகள் | எக்கட்சியும் சாராதோர் |
|---|---|---|---|---|
| தி.மு.க | 74.9 | 4.3 | 30.8 | 32.5 |
| அ.தி.மு.க. | 12.3 | 91.4 | 46.2 | 30.8 |
| வாக்களிக்கப்போவதில்லை | 3.1 | 0.7 | 7.7 | 4.8 |
| தீர்மானிக்கவில்லை | 4.8 | 1.4 | 7.7 | 18.1 |
| பிற கட்சிக்கு வாக்கு | 4.9 | 2.2 | 7.6 | 13.8 |

இங்கு – அ.தி.மு.க. உறுப்பினர்களோடு ஒப்பிடும்போது, தி.மு.க. உறுப்பினர்கள் வரும் தேர்தலில் வேறு கட்சிகளுக்கு வாக்களிக்கவிருப்பதாக கூறுவது அதிகமான சதவீதத்துடன் காணப்படுகின்றது. குறிப்பாக 12.3 % தி.மு.க. உறுப்பினர்கள் – அ.தி.மு.க.வுக்கு வாக்களிக்கப்போவதாக கூறுகின்றனர். ஆனால் – அ.தி.மு.க. உறுப்பினர்களில் 4.3 % பேரே அ.தி.மு.க.வுக்கு வாக்களிக்காமல் தி.மு.க.வுக்கு வாக்களிக்கப்போவதாக கூறுகின்றனர். இதேவேளை – எதிர்வரும் தேர்தலில் வாக்களிக்க விரும்பாத, தமது கட்சியை விட்டு பிற கட்சிகளுக்கு வாக்களிக்கப்போகும் கட்சி உறுப்பினர்களில் ஒப்பீட்டு ரீதியான ஆய்வினை மேற்கொண்டால் அவற்றிலும் – தி.மு.க. உறுப்பினர்களே அ.தி.மு.க.வினரை விட அதிகமான அளவில், தமது கட்சியை விட்டு வெளியே உள்ளோருக்கு வாக்களிக்க விருப்பம் தெரிவித்துள்ளனர். இவ்விடயமானது – தி.மு.க.வுக்கு அ.தி.மு.க.வினைவிட பின்னடைவைத்தரும் வகையில் அமைவதை நோக்கலாம்.

அத்தோடு கருத்துக்கணிப்பில் பங்கேற்றோர் உறுப்பினராயுள்ள கட்சிரீதியாகக் கருதினால், கருத்துக்கணிப்பானது தி.மு.க. உறுப்பினர்களையே அதிகமாகவும் (20.1 %), அ.தி.மு.க. உறுப்பினர்களை ஒப்பீட்டளவில் குறைவாகவும் (12.3 %) கொண்டிருக்கிறது. இதன்படி கருத்துக்கணிப்பின் மேலேயுள்ள ஆய்வானது – தி.மு.க.வுக்கு சாதகமான முடிவினையே தருவதாக அமைந்திருக்க வேண்டும். இருந்த போதும் – தி.மு.க.வுக்கு கட்சி உறுப்பினர்களிடமே கிடைத்துள்ள ஆதரவு இழப்பு மேலுள்ள ஆய்வின் முடிவினை விட அதிகமான பாதிப்பினையே ஒட்டுமொத்தத்தில் தரவல்லதாக இருக்கப்போகின்றது.

## ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு மக்களின் பிரதிபலிப்புக்கள்

வரும் தேர்தலில் – தமிழக அரசியல்வாதிகள் மீதுள்ள ஊழல் குற்றச்சாட்டுகளைப் பொருத்தவரையில் அ.திமு.க.வில் 25.8 % பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும் அதேவேளை 20 % பெரும் பாதிப்பு தி.மு.கவுக்கும் ஏற்படும் என மக்கள் தெரிவித்துள்ளனர்.

அ.தி.மு.க. மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களும் தேர்தல் வெற்றியும்

| பாதிப்பின் தன்மை | சதவீதம் |
|---|---|
| பெரும்பாதிப்பு | 25.8 |
| கணிசமான அளவு | 20.4 |
| சிறிதளவு | 20.9 |
| பாதிக்காது | 32.9 |

தி.மு.க. மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களும் தேர்தல் வெற்றியும்

| பாதிப்பின் தன்மை | சதவீதம் |
|---|---|
| பெரும்பாதிப்பு | 20.0 |
| கணிசமான அளவு | 27.2 |
| சிறிதளவு | 23.0 |
| பாதிக்காது | 29.8 |

## ஊழல் குற்றச்சாட்டுகள் பற்றிய கட்சி ரீதியான உணர்வலைகள்

ஊழல் குற்றச்சாட்டுகள் பற்றிய கட்சி ரீதியான உணர்வலைகளை அவதானிக்குமிடத்து – தி.மு.க.வுக்கு ஆதரவு அளிப்போர் அ.தி.மு.க மீதும், அ.தி.மு.கவிற்கு ஆதரவளிப்போர் தி.மு.க.மீதும் ஊழல் குற்றச்சாட்டுகளால் பெரும் பாதிப்பு ஏற்படும் என்று கூறுகின்றனர். ஆனால் ஏனைய கட்சிகளுக்கு வாக்களிப்போரைப் பொருத்தவரையில் கூட்டணி வேறுபாடின்றி இரண்டு கட்சிகள் மீதுமே ஏறத்தாழ சமமான அளவில் – ஊழல் குற்றச்சாட்டுகளால் பாதிப்பு ஏற்படும் எனக் கருத்து தெரிவிக்கப்படுகின்றது.

## அதிமுக மீதான உணர்வலைகள்

| | வாக்காளர்கள் (%) | | | |
|---|---|---|---|---|
| | பெரும்பாதிப்பு | கணிசமான அளவு | சிறிதளவு | பாதிப்பில்லை |
| தி.மு.க | 58.9 | 40.4 | 25.8 | 18.5 |
| அ.தி.மு.க. | 12.0 | 26.5 | 35.6 | 49.8 |
| பிற கட்சிகள் | 16.4 | 15.7 | 20.0 | 13.0 |
| வாக்களிக்கப்போவதில்லை | 2.4 | 4.3 | 4.7 | 3.5 |
| தீர்மானிக்கவில்லை | 10.3 | 13.1 | 13.9 | 15.2 |

## திமுக மீதான உணர்வலைகள்

| | வாக்காளர்கள் (%) | | | |
|---|---|---|---|---|
| | பெரும்பாதிப்பு | கணிசமான அளவு | சிறிதளவு | பாதிப்பில்லை |
| தி.மு.க | 11.5 | 31.6 | 41.5 | 48.9 |
| அ.தி.மு.க. | 58.1 | 32.6 | 26.6 | 18.7 |
| பிற கட்சிகள் | 20.0 | 18.0 | 14.6 | 12.5 |
| வாக்களிக்கப்போவதில்லை | 3.5 | 5.5 | 4.2 | 1.5 |
| தீர்மானிக்கவில்லை | 6.9 | 12.3 | 13.1 | 18.4 |

மேற்காணும் அட்டவணைகளின் அடிப்படையில் சில விடயங்களை நாம் ஆய்ந்தறியமுடியும். அ.தி.மு.க. மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் – தி.மு.க. தரப்பிலிருந்து கூறப்படுவது போல், எதிர்வரும் தேர்தலில் பெரும்பாதிப்பினை ஏற்படுத்தும் எனக் கூறிவிட முடியாது. ஒப்பீட்டு ரீதியாக ஆராயுமிடத்து இரு கட்சிகளுமே ஊழல் குற்றச்சாட்டுகளின் பாதிப்பு நிலைகளில் ஒன்றையொன்று தொடர்ந்த வண்ணமே இருப்பதை வாக்காளர்கள் இனங்காட்டுகின்றனர். எனவே, அரசியல் கள நிலவரத்தைப் பொருத்தவரையில் அ.தி.மு.க. மீது தி.மு.க. ஊழல் குற்றச்சாட்டுக்களையே பிரதான தேர்தல் விடயமாக முன்வைக்குமாயின் – அது "பூமாராங்" ஆகி தி.மு.க.வையே திருப்பித்தாக்கும் அபாயத்தையும் இங்கு குறிப்பிடலாம்.

ஏனைய கட்சிகளுக்கு ஆதரவளிக்கப்போவோரைக் கருதினால், அவர்களின் பார்வையில் ஊழல் குற்றச்சாட்டுக்களால் அ.தி.மு.க. பெருமளவில் பாதிக்கப்படுவதைக் (16.4 % ) காட்டிலும் தி.மு.க.வே ஒப்பீட்டளவில் அதிகமாக பெரும்பாதிப்படைய (20.0 %) வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. கணிசமான பாதிப்பு நிலையிலும் – இதே தன்மையே (அ.தி.மு.க. –15.7%, தி.மு.க.–18.0% ) வெளிப்படுத்தப்படுகின்றது.

யாருக்கு வாக்களிப்பதென இதுவரை தீர்மானிக்காதவர்களின் போக்கினைக் கணிக்குமிடத்து ஊழல் குற்றச்சாட்டுகளால் ஒப்பீட்டளவில் அ.தி.மு.க.வுக்கு பாதிப்பு அதிகம் என்ற கருத்து வெளிப்படுத்தப்படுகின்றது.

## தமிழகத்தில் இனி கூட்டணி ஆட்சியே

தமிழகத்தில் அடுத்த ஆட்சி கூட்டணி ஆட்சியாகவே இருக்கும் எனத் தெரிவிக்கும் மக்கள் தி.மு.க கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு இருப்பதாக கூறுகின்றனர்.

| கட்சி / கூட்டணி | வெற்றி வாய்ப்பு (%) |
|---|---|
| தி.மு.க. தனித்து | 18.1 |
| தி.மு.க. கூட்டணி | 31.7 |
| அ.தி.மு.க. தனித்து | 13.9 |
| அ.தி.மு.க. கூட்டணி | 29.1 |
| மூன்றாம் அணி | 7.2 |

தமிழகத்தில் இனி அடுத்து வரவிருப்பது கூட்டணி ஆட்சியே என 60.8 சதவீதமானோர் கருத்து தெரிவித்தனர். தி.மு.க., அ.தி.மு.க. என இரு தரப்பிலிருந்தும் இதே கருத்து பெரும்பான்மையாக முன் வைக்கப்படுகின்றது. அதேவேளை – தி.மு.க. தலைமையிலான கூட்டணியும் அ.தி.மு.க. கூட்டணியும் ஏறத்தாழ சம வெற்றி வாய்ப்புள்ளவையாகவே (வேறுபாடு – 2.6 % மட்டுமே) இருக்கின்றன.

## வெற்றிக் கூட்டணி எது?

தமிழகத்தில் அடுத்து ஆட்சியைப் பிடிக்கும் வாய்ப்புள்ளது தி.மு.க. – பி.ஜே.பி – ம.தி.மு.க – பா.ம.க கூட்டணியே என 42.6 சதவீதமானோர் கூற, அடுத்து நெருக்கமான போட்டியில் அ.தி.மு.க. – த.மா.கா. – இடதுசாரிகள் – காங்கிரஸ் கூட்டணி இருப்பதாக 35.8 சதவீதமானோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

| கூட்டணி | வெற்றி வாய்ப்பு (%) |
|---|---|
| தி.மு.க. –பி.ஜே.பி– ம.தி.மு.க – பா.ம.க | 42.6 |
| அ.தி.மு.க. – த.மா.கா. – இடதுசாரிகள் – காங்கிரஸ் | 35.8 |
| அ.தி.மு.க.. –பி.ஜே.பி– ம.தி.மு.க – பா.ம.க | 6.3 |
| தி.மு.க. – த.மா.கா. – இடதுசாரிகள் | 4.8 |
| மேற்படி கட்சிகள் இடமாறும் வேறு கூட்டணி | 10.5 |

தமிழகத்திலுள்ள கூட்டணிக்கட்சிகளைப் பொருத்தவரையில் தி.மு.க. தலைமையில் இன்று இருக்கும் கட்சிகள் கொண்ட கூட்டணியே (தி.மு.க. – பி.ஜே.பி – ம.தி.மு.க. – பா.ம.க) அ.தி.மு.க கூட்டணியை விட சற்று அதிகமான வெற்றி வாய்ப்புள்ள கூட்டணியாக வாக்காளர்களால் கருதப்படுகின்ற நிலையில் – இக்கூட்டணியிலிருந்து பா.ம.க. பிரிந்து அ.தி.மு.க.வில் சேரலாம் எனவும், அதேபோல், அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து த.மா.கா விலகி தி.மு.க. அணிக்கு வரலாமெனவும் கருத்து தெரிவிப்பவர்களும் (இடமாறும் வேறு கூட்டணி – 10.5%) குறிப்பிடத்தக்க சதவீதத்திலுள்ளனர். இது இவ்வாறிருக்க – முதலிரு இடங்களைப் பெறும் கூட்டணிகளுக்கிடையிலான வாக்கு வித்தியாசம் (6.8.%) கட்சிகள் இடம்மாறும் வேறு கூட்டணிக்கான சதவீதத்திலும் (10.5%) குறைவாகக் காணப்படுவதும், சென்ற தேர்தலில் அமைந்திருந்த கூட்டணிகள் இப்போதும் எதிர்பார்க்கப்படும் நிலையும் (அ.தி.மு.க.– பி.ஜே.பி – ம.தி.மு.க – பா.ம.க மற்றும் தி.மு.க. – த.மா.கா – இடது சாரிகள்) இறுதி வெற்றியில் நிச்சயம் செல்வாக்கைச் செலுத்தக் கூடியதாக இருக்கும்.

## கட்சி ரீதியாக வாக்களிப்பவர்களின் ஆட்சி பற்றிய விருப்பம்

எதிர்வரும் தேர்தலில் கட்சி ரீதியாக வாக்களிக்கவிருப்பவர்கள் இனிவரும் தமிழக அரசு கூட்டணி அரசாகவே அமையும் என உறுதியாகக் கூறுகின்றனர். குறிப்பாக தி.மு.க.வுக்கு வாக்களிக்களிப்பவர்களும் அ.தி.மு.க.வுக்கு வாக்களிப்பவர்களும் ஏறத்தாழ சமவீதத்தில் கூறுவது குறிப்பிடத்தக்கது.

| | கட்சி ரீதியாக வாக்காளர்கள் (%) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| திமுக – தனித்து | 38.3 | 3.0 | 16.7 | 4.3 | 3.4 | 21.4 | 11.6 | 9.8 | 12.8 |
| திமுக – கூட்டணி | 53.0 | 7.9 | 44.7 | 26.1 | 27.6 | 42.9 | 23.2 | 39.0 | 36.1 |
| அதிமுக – தனித்து | 2.5 | 32.6 | 11.1 | 0.0 | 17.2 | 9.5 | 7.2 | 4.9 | 7.5 |
| அதிமுக – கூட்டணி | 4.8 | 53.7 | 22.2 | 43.5 | 48.3 | 16.7 | 33.3 | 29.3 | 33.1 |
| மூன்றாவது அணி | 1.3 | 2.7 | 5.6 | 26.1 | 3.4 | 9.5 | 24.6 | 17.1 | 10.5 |

1– தி.மு.க 2– அ.தி.மு.க 3– பா.ம.க. 4–த.மா.கா 5–காங்கிரஸ்
6–பி.ஜே.பி. 7– பிற கட்சிகள் 8– வாக்களிக்கப்போவதில்லை 9– தீர்மானிக்கவில்லை

தி.மு.க. அல்லது அ.தி.மு.க, கட்சிகளுக்கு ஆதரவளிப்போரின் நிலை பெரும்பாலும் கூட்டணி அரசுக்கே வாய்ப்பாக இருக்குமிடத்தில் – கூட்டணியில் இடம்பெறும் கட்சிகளுக்கு ஆதரவளிப்போரின் விருப்பங்களும் சுவாரசியமான எதிர்பார்ப்புக்களை வெளிப்படுத்துகின்றன.

பா.ம.க.வுக்கு ஆதரவளிப்போரில் 66.6% பேரும். த.மா.கா.வுக்கு ஆதரவளிப்போரில் 69.6% பேரும். காங்கிரசுக்குஆதரவளிப்போரில் 75.9 % பேரும். பி.ஜே.பி.க்கு ஆதரவளிப்போரில் 59.6 % பேரும். தி.மு.க.வோ அ.தி.மு.க.வோ கூட்டணி அரசையே அமைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதை வெளிப்படுத்துகின்றனர்.

பிரதான இரு கட்சிகளான தி.மு.க., அ.தி.மு.க, தவிர்த்த ஏனைய கட்சிகளில் பா.ம.க., த.மா.கா., காங்கிரஸ் என்பனவற்றை ஆதரவளிப்போர் தற்போது அக்கட்சிகள் சார்ந்திருக்கும் கூட்டணிக்கே பெருமளவில் ஆதரவை வெளிப்படுத்தினாலும், இவ்வெளிப்பாட்டைக்காட்டும் எண்ணிக்கையில் அரைப்பங்கிலும் மேலானோர் – எதிரணிக் கூட்டணி ஆட்சி அமைப்பதை எதிர்பார்த்துள்ளனர். இத்தகைய எதிரணி மீதான குறிப்பிடத்தக்க எதிர்பார்ப்பானது, கூட்டணிகளில் மாற்றத்தை எதிர்நோக்கும் தன்மையின் குறிப்பிடத்தக்க பிரதிபலிப்பு எனவும் கொள்ள முடியும்.

## வாக்காளர்களின் எதிர்பார்ப்புக்கள்

### கடந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் வாக்களிக்கும்போது மக்களிடமிருந்த எதிர்பார்ப்புக்கள்

கடந்த சட்ட மன்றத் தேர்தலில் வாக்களிக்கும்போது – கருத்துக்கணிப்பில் பங்கேற்றோரில் தாம் சார்ந்த கட்சிக்காகவென 19.8 சதவீதத்தினரும், ஊழலற்ற ஆட்சி வேண்டுமென 15 சதவீதத்தினரும் வாக்களித்துள்ளனர்.

| எதிர்பார்ப்புக்கள் | வாக்காளர்கள் (%) |
| --- | --- |
| கட்சிக்காக | 19.8 |
| ஊழலற்ற ஆட்சி வேண்டும் | 15.0 |
| மக்களது அடிப்படைத்தேவைகள் நிறைவேற வேண்டும் | 11.9 |
| வேலைவாய்ப்பு | 7.9 |
| விலைவாசி உயர்வு கட்டுப்படுத்த, ரேஷன் சீரான விநியோகம் | 6.9 |
| ஆட்சி மாற்றம் வேண்டி | 5.9 |
| விவசாயிகள் மற்றும் பிற தொழிலுக்கான சலுகைகள் எதிர்பார்ப்பு | 3.2 |
| பிற எதிர்பார்ப்புக்கள் | 22.6 |
| எதிர்பார்ப்புக்கள் எவையும் இல்லை மற்றும் பதிலளிக்காதோர் | 6.8 |

கடந்த தேர்தலில் வாக்காளர்களின் எதிர்பார்ப்புக்களைக் கணிக்கும் இடத்து – கட்சிக்காக வாக்களித்தோரின் சதவீதம் அதிகமானதென முதலிடத்தில் தோன்றினாலும் (19.8%) – ஊழலற்ற ஆட்சி வேண்டும் (15.0%) , ஆட்சி மாற்றம் வேண்டும் (5.9%) ஆகிய எதிர்பார்ப்புக்கள் – அ.தி.மு.க. ஆட்சியை அகற்றுவதையே குறியாகக் கொண்ட எதிர்ப்பு வாக்குகள் என்னும் தளத்தில் ஒன்றிணைந்தவை. இதன்படி இந்த இரு எதிர்பார்ப்புக்களின் மொத்த சதவீதமானது (20.9%) – கட்சிக்காக வாக்களித்தவர்களின் எண்ணிக்கையிலும் சற்று அதிகமாக இருப்பதைக் கருத்திற்கொண்டு பிரதானமான எதிர்பார்ப்பு எதுவாக இருந்ததென்பதை அடையாளம் காண முடியும்

## புதிய தேர்தலில் மக்களின் எதிர்பார்ப்புக்கள்

எதிர்வரும் புதிய சட்டமன்றத் தேர்தலில் ஊழலற்ற ஆட்சி தொடர வேண்டுமென வாக்களிக்கப்போவதாக 16.5 சதவீதத்தினரும், வேலைவாய்ப்புக்கள் மற்றும் தொழில்வளர்ச்சியை எதிர்பார்த்து வாக்களிக்கப்போவதாக 13.8 சதவீதத்தினரும் கருத்துக் கூறியுள்ளார்கள்.

| எதிர்பார்ப்புக்கள் | வாக்காளர்கள் (%) |
| --- | --- |
| ஊழலற்ற ஆட்சி தொடர வேண்டும் | 16.5 |
| வேலைவாய்ப்பு, தொழில்வளர்ச்சி | 13.8 |
| அடிப்படைத்தேவைகள் நிறைவேற்ற வேண்டும் | 13.5 |
| விலைவாசி குறைப்பு, சீரான ரேஷன் விநியோகம் | 11.3 |
| கட்சிக்காக வாக்களிப்போர் | 7.7 |
| ஆட்சி மாற்றம், அடுத்த கட்சிக்கு வாய்ப்பு | 6.4 |
| விவசாயிகள், தொழிலாளர் சலுகைகள் | 3.0 |
| ஏனைய எதிர்பார்ப்புக்கள் | 21.3 |
| எதிர்பார்ப்புக்கள் இல்லாதோர், பதிலளிக்காதோர் | 6.5 |

வரும் தேர்தலில் ஆட்சி மாற்றம் என்ற எதிர்பார்ப்புக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டோரில் பெரும்பான்மையோர் *கேரளா மாதிரியான அரசியல் நிலவரத்தை* – அதாவது கட்யூனிஸ்ட்டுகளும் காங்கிரசும் மாறி மாறி ஆட்சிக்கு வருவதை ஒத்ததாகத் தமிழக ஆட்சி மாற்றமும் அமைய வேண்டும் எனத் தெரிவித்துள்ளமையைக் கவனித்திற் கொள்ள வேண்டியுள்ளது. வரவிருக்கின்ற தேர்தலில் வாக்காளர்களது மற்றைய எதிர்பார்ப்புக்களைக் கவனிப்போமாயின், இங்கு ஊழலற்ற ஆட்சி தொடர வேண்டும் என்பதே வாக்களர்களின் முதல் எதிர்பார்ப்பாகக் காணப்படுகின்றது. இது தற்போதைய ஆட்சி தொடரப்பட வேண்டும் என்ற கருத்தில் ஆராயப்படுமானால் தி.மு.க.வுக்குச் சாதகமான அம்சமாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை – வேறு சில எதிர்பார்ப்புக்களையும் ஒப்பீட்டு ரீதியாக ஆராய முடியும். மக்களது அடிப்படைத்தேவைகள், வேலைவாய்ப்பு, விலைவாசி உயர்வு, ரேஷன் பொருட்களின் விநியோகம் போன்ற விடயங்களின் மீதான எதிர்பார்ப்பு மக்களிடம் அதிகரித்திருப்பதையும் மேலே உள்ள அட்டவணைகளிலிருந்து நாம் கண்டறியலாம். அந்த அதிகரிப்பு சதவீதமானது – தி.மு.க. அரசு முன்னைய அ.தி.மு.க அரசினைவிட இவ்விடயங்களில் அதிகம் கவனம் செலுத்தவில்லையென்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

## கடந்த சட்டமன்றத் தேர்தலில் வாக்காளர் எதிர்பார்ப்புக்களின் பலன்

கடந்த சட்ட மன்றத் தேர்தலில் வாக்களிக்கும்போது இருந்த எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்பட்டதாக *19* சதவீதத்தினர் கூற, அவை எவையும் நிறைவேற்றப்படவில்லையென 44.7 சதவீதத்தினர் மறுத்துக் கூறியுள்ளனர்.

| எதிர்பார்ப்புக்களின் பலன் | வாக்காளர்கள் (%) |
|---|---|
| நிறைவேற்றப்பட்டன | *19.0* |
| ஓரளவு நிறைவேற்றப்பட்டன | *29.4* |
| நிறைவேற்றப்படவில்லை | *44.7* |
| பதிலளிக்காதோர் | *6.9* |

### கடந்த தேர்தலில் எதிர்பார்ப்பு நிறைவேறியதா? ~ கட்சி ரீதியான கருத்துக்கள்

தி.மு.க. அரசில் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறியதா என்பது பற்றி, வரும் தேர்தலில் தி.மு.க.வுக்கு ஆதரவளிப்போரில் *68* % பேர் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறியதாகக் கூறுகின்றனர். அதேவேளை அ.தி.மு.க.வுக்கு ஆதரவளிக்கும் *49*% பேர் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறவில்லையெனக் கூறுகின்றனர்.

| | வாக்காளர்கள் (%) | | | |
|---|---|---|---|---|
| கட்சி | ஆம் | ஓரளவு | இல்லை | கருத்துக்கூற விரும்பவில்லை |
| தி.மு.க. | *68.0* | *46.1* | *15.4* | *24.4* |
| அ.தி.மு.க. | *10.7* | *21.7* | *49.0* | *30.8* |
| பிறகட்சிகள் | *13.3* | *15.9* | *22.7* | *33.3* |
| வாக்களிக்கப்போவதில்லை | *1.0* | *0.6* | *0.4* | *0.0* |
| தீர்மானிக்கவில்லை | *7.0* | *15.7* | *12.5* | *11.5* |

பிற கட்சிகளுக்கு வாக்களிக்கப்போவோர்களின் கருத்துப்படி *13.3* சதவீதமானோரே எதிர்பார்ப்புக்கள் நிறைவேறியதாகத் திருப்தியடைகின்றனர். இதன் மூலம் மக்கள் மத்தியில் பரவலான ஏமாற்றம் நிலவுவதை ஊகிக்கலாம். ஆனால் இந்த ஏமாற்றம் அழுத்தமானதாக இல்லாததால் தி.மு.க. எதிரான அலை தீவிரமாக இவ்விடயத்தில் எழும் வாய்ப்பு இல்லை எனக் கருதலாம்.

# சினிமா அரசியல்

## பிடித்த நடிகர்களும் அவர்களின் அரசியல் செல்வாக்கும்

### மக்களுக்குப் பிடித்த நடிகர்கள்

தமிழ் சினிமா நடிகர்களில் மக்களுக்குப் பிடித்தமானவர்களில் ரஜினி முதலிடத்தையும், விஜயகாந்த் இரண்டாவது இடத்தையும் பெறுகின்றனர்.

| நடிகர்கள் | விரும்புவோர் (சதவீதத்தில்) |
|---|---|
| ரஜினி | 26.7 |
| விஜயகாந்த் | 12.9 |
| கமலஹாசன் | 11.6 |
| சிவாஜி | 11.4 |
| எம்.ஜி.ஆர் | 9.5 |
| பிற நடிகர்கள் | 15.1 |
| யாரையும் பிடிக்காது | 12.7 |

### நடிகர்களை விரும்புவதற்குக் காரணம்

சினிமா நடிகர் நடிகைகளைப் பிடிப்பதற்கு அவர்களது நடிப்புத்திறன்தான் காரணமென 44.8 சதவீதமானோர் கூற – அவர்களது அரசியல் ஈடுபாடு காரணமாக நடிகர்களைப் பிடிப்பதாக 7.7 சதவீதத்தினரே கருதுகின்றனர். நடிகர்கள் நல்லவர்கள், எம்.ஜி.ஆரின் செல்வாக்கு முதலான வேறு காரணங்களால் நடிகர்களை பிடித்திருப்பதாக 21.6 சதவீதத்தினர் கூறுகின்றனர்.

| நடிகர்களை விரும்பக் காரணம் | வாக்காளர்கள் (%) |
|---|---|
| நடிப்புத் திறன் | 44.8 |
| கொள்கை, ஏழைகளுக்கு உதவி | 18.2 |
| ஸ்டைல், சண்டை | 7.8 |
| அரசியல் ஈடுபாடு, கதையினூடாக செய்தி சொல்லுதல் | 7.7 |

## அரசியலில் நடிகர் நடிகைகளின் ஈடுபாடு

தமிழக அரசியலில் – சினிமா நடிகர் நடிகைகள் அரசியலில் ஈடுபடுவதை ஆதரிக்கப் போவதில்லை என 68.5 சதவீதம் மக்கள் கூறுகின்றனர். அதேவேளை 31.5 சதவீதத்தினர் சினிமா நடிகர் – நடிகைகள் அரசியலில் ஈடுபட ஆதரவு தெரிவித்துள்ளனர்.

### அரசியலில் நடிகர் நடிகைகள் ~ ஆதரிப்போரின் கருத்துக்கள்

அரசியலில் நடிகர் நடிகைகள் ஈடுபடுவதை ஆதரிப்போர் – அவர்கள் மக்களுக்கு நல்லது செய்வார்கள் என்ற கருத்தை முதன்மையாக முன்வைக்கின்றனர். நடிகர்களும் குடிமக்களே, அவர்கள் நல்ல மனிதர்கள் போன்ற வேறு காரணங்களால் 41.6 சதவீதத்தினரும் நடிகர்கள் அரசியலில் ஈடுபடுவதை ஆதரிக்கின்றனர்.

| கருத்துக்கள் | ஆதரிப்போர் (%) |
|---|---|
| மக்களுக்கு நல்லது செய்வார்கள் | *20.9* |
| மக்களிடையே செல்வாக்கு உண்டு | *18.5* |
| மக்களின் கஷ்டம் தெரிந்தவர்கள் | *15.4* |
| திறமை மிக்கவர்கள் | *3.6* |

## எதிர்ப்போரின் கருத்துக்கள்

அரசியலில் நடிகர்–நடிகைகள் ஈடுபடுவதை எதிர்ப்போர் – அவர்களுக்கு அரசியலே தெரியாது என்ற கருத்தை முதன்மையாக முன் வைக்கின்றனர். நடிகர்கள் நாட்டை கெடுத்துவிட்டார்கள், அவர்களை நம்ப முடியாது போன்ற வேறு காரணங்களால் நடிகர்கள் அரசியல் ஈடுபாட்டை *36.9* சதவீதத்தினர் எதிாக்கின்றனர்.

| கருத்துக்கள் | எதிர்ப்போர் (%) |
|---|---|
| அரசியல் தெரியாது | *35.8* |
| வெறும் கிளாமர், கூட்டம் சேர்ப்பார்கள் | *16.3* |
| கொள்கை இருக்காது, சந்தர்ப்பவாதம், சுயலாபம் அதிகம் | *10.0* |
| ரசிகர்களை இழந்து விடுவார்கள் | *1.0* |

## நடிகர் நடிகைகளின் தேர்தல் பிரச்சாரம்

வரும் தேர்தலில் நடிகர்–நடிகைகள் தேர்தல் பிரச்சாரத்தில் இறங்கினாலும் அவர்களின் பிரச்சாரம் தங்களது வாக்களிக்கப்போகும் தீர்மானங்களைப் பாதிக்காது என 57.5 சதவீதமானோர் கருத்து தெரிவித்துள்ளனர்.

| கருத்துக்கள் | வாக்காளர்கள் (%) |
|---|---|
| நடிகர் –நடிகைள் பிரச்சாரம் என்னை பாதிக்காது | 57.5 |
| நான் ஆதரிக்கும் கட்சியாக இருந்தால் மட்டும் | *29.3* |
| எதிரணியாக இருந்தாலும் ஆதரவு தருவேன் | *13.2* |

## எனது தொகுதியில் நான் சார்ந்த கட்சியில் அபிமான நடிகர்

தனது தொகுதியில் தனக்குப் பிடித்தமான நடிகர், தான் சார்ந்த கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டால் அவருக்கு வாக்களிப்பதாக *74.8* சதவீதத்தினர் ஆதரவு தெரிவிக்கின்றனர்.

| கருத்துக்கள் | வாக்காளர்கள் (%) |
|---|---|
| வாக்களிப்பேன் | *74.8* |
| வாக்களிக்கப்போவதில்லை | *21.9* |
| கருத்துக் கூற விருப்பமில்லை | *3.3* |

ஆனால் அவருக்கான வெற்றி வாய்ப்பு *40.6* சதவீதம் எனவும் வெற்றியடைய மாட்டார் என்பது *16.3* சதவீதம் எனவும் எதுவும் நிச்சயமில்லை என்பது *43.1* சதவீதம் எனவும் வாக்காளர்கள் கருதுகின்றனர்.

## எனது தொகுதியில் எதிரணியில் அபிமான நடிகர்

தனது தொகுதியில் தனக்குப் பிடித்தமான அபிமான நடிகர் எதிரணி வேட்பாளராகப் போட்டியிட்டால் அவருக்கு வாக்களிக்கப் போவதில்லை என *76.8* சதவீதத்தினர் கூறுகின்றனர்.

| கருத்துக்கள் | வாக்காளர்கள் (%) |
|---|---|
| வாக்களிப்பேன் | 19.7 |
| வாக்களிக்கப்போவதில்லை | 76.8 |
| கருத்துக் கூற விருப்பமில்லை | 3.5 |

தனது தொகுதியில் தனக்குப் பிடித்தமான நடிகர் எதிரணி வேட்பாளராகப் போட்டியிட்டால் அவர் வெற்றியடைவார் என 22.5 சதவீதத்தினரும், வெற்றியடைய மாட்டார் என 23.9 சதவீதத்தினரும், எதுவும் நிச்சமில்லை என 53.6 சதவீதத்தினரும் கருதுகின்றனர்.

## எனது தொகுதியில், எனது சாதி வேட்பாளருக்கு எதிராக அபிமான நடிகர்

தனது தொகுதியில் தனது சாதி வேட்பாளருக்கு எதிராக பிடித்தமான அபிமான நடிகர் போட்டியிட்டால் அவருக்கு வாக்களிக்கப் போவதில்லை என 46.5 சதவீதத்தினர் கூற, அதேயளவு சதவீதத்தினர் தனது சாதி வேட்பாளர் போட்டியிட்டாலும் தனது அபிமான நடிகரையே ஆதரிப்போம் எனக் கூறுகின்றனர்.

| கருத்துக்கள் | வாக்காளர்கள் (%) |
|---|---|
| வாக்களிப்பேன் | 46.5 |
| வாக்களிக்கப்போவதில்லை | 46.5 |
| கருத்துக் கூற விருப்பமில்லை | 7.0 |

## நடிகர்களின் தனிக்கட்சிக்கு மக்கள் ஆதரவு

நடிகர்கள் தனிக்கட்சி ஆரம்பித்தால் அவர்களுக்கு ஆதரவளிக்கப்போவதில்லை என 56.7 சதவீதமானோர் கூறுகின்றனர். ஆனாலும் ரஜினி தனிக்கட்சி ஆரம்பித்தால் அவருக்கு ஆதரவு வழங்கலாம் என 26.4 சதவீதமானோர் தெரிவிக்கின்றனர்.

| நடிகர்கள் | வாக்காளர்கள் (%) |
|---|---|
| ரஜினி | 26.4 |
| விஜயகாந்த் | 11.1 |
| வேறு நடிகர்கள் | 5.8 |
| எவருக்கும் ஆதரவில்லை | 56.7 |

## நடிகர் கட்சி வேட்பாளராக எனது சாதியைச் சாராதவர் நின்றால்...?

நடிகர்கள் தனிக்கட்சி ஆரம்பித்து வேட்பாளர்களை நிறுத்தினாலும் தனது சாதியைச் சாராதவர் வேட்பாளராக நிறுத்தப்பட்டால் அவ்வேட்பாளருக்கு வாக்களிக்கப் போவதில்லை என 56.2 சதவீதத்தினர் தெரிவிக்கின்றனர்.

| கருத்துக்கள் | வாக்காளர்கள் (%) |
|---|---|
| வாக்களிப்பேன் | 38.1 |
| வாக்களிக்கப்போவதில்லை | 56.2 |
| கருத்துக் கூற விருப்பமில்லை | 5.7 |

### ரஜினி / விஜயகாந்த் தனிக்கட்சியில் இணையும் தி.மு.க. / அ.தி.மு.க. கட்சி உறுப்பினர்கள்

எதிர்வரும் தேர்தலில் வாக்களிக்கப்போகின்ற 25.9 சதவீதமான தி.மு.க. உறுப்பினர்கள் ரஜினி தனிக்கட்சி ஆரம்பித்தால் அவருடன் இணையப்போவதாகவும், 10 சதவீதமான தி.மு.க. உறுப்பினர்கள் விஜயகாந்த் தனிக்கட்சி ஆரம்பித்தால் அவருடன் இணையத் தயாராக இருப்பதாகவும் கூறுகின்றனர்.

| | கட்சி உறுப்பினர்கள் (%) | | | |
|---|---|---|---|---|
| | திமுக ~2001 | | அதிமுக ~ 2001 | |
| | ரஜினி | விஜயகாந்த் | ரஜினி | விஜயகாந்த் |
| திமுக | *25.9* | *10.0* | *5.3* | *5.3* |
| அதிமுக | *2.4* | *0.0* | *14.2* | *11.0* |
| எந்தக்கட்சியும் சாராதோர் | *10.3* | *3.6* | *10.0* | *4.0* |

இந்தத் தரவுகளை ஒப்பீட்டு ரீதியாக கணிப்பிட்டால் – ரஜினி தனிக்கட்சி ஆரம்பித்தால் அவரிடம் போய்ச் சேரும் தி.மு.க. உறுப்பினர்கள் அ.தி.மு.க. உறுப்பினர்களை விட அதிகமாகக் காணப்படுகின்றனர். இது ரஜினி தனிக்கட்சி ஆரம்பித்தால் தி.மு.க.வே அதிகம் பாதிக்கப்படவிருப்பதை எடுத்துக்காட்டுகிறது.

## சாதி ரீதியாக நடிகர்களின் செல்வாக்கு

### சாதீய ரீதியாக பிடித்த நடிகர்

| | வாக்காளர்கள் (%) | |
|---|---|---|
| சாதி | ரஜினி | விஜயகாந்த் |
| தாழ்த்தப்பட்டோர் | *29.7* | *15.1* |
| நாடார் | *28.6* | *8.9* |
| முதலியார் | *31.4* | *8.8* |
| வன்னியர் | *24.4* | *14.6* |
| யாதவர் | *25.8* | *16.1* |
| முக்குலத்தோர் | *22.4* | *9.6* |
| நாயுடு, ரெட்டி | *19.0* | *6.9* |
| பிறர் | *26.5* | *14.9* |

### பிடித்த நடிகர்களின் தனிக்கட்சியில் இணைவது

| | வாக்காளர்கள் (%) | |
|---|---|---|
| சாதி | ரஜினி | விஜயகாந்த் |
| தாழ்த்தப்பட்டோர் | *23.2* | *8.6* |
| நாடார் | *19.6* | *3.6* |
| முதலியார் | *21.2* | *5.8* |
| வன்னியர் | *17.9* | *6.5* |
| யாதவர் | *12.9* | *9.7* |
| முக்குலத்தோர் | *16.8* | *5.6* |
| நாயுடு, ரெட்டி | *8.6* | *5.2* |
| பிறர் | *20.0* | *7.5* |

வரும் தேர்தலில் தி.மு.க / அ.தி.மு.கவுக்கு வாக்களிப்போரில் – நடிகர்கள் தனிக்கட்சி ஆரம்பித்தால் அவர்களிடம் போய்ச் சேருபவர்கள் – சாதி ரீதியான கணிப்பு

| சாதி | வாக்காளர்கள் (%) தி.மு.க ரஜினி | தி.மு.க விஜயகாந்த் | அதிமுக ரஜினி | அதிமுக விஜயகாந்த் |
|---|---|---|---|---|
| தாழ்த்தப்பட்டோர் | *24.6* | *10.8* | *19.7* | *6.6* |
| நாடார் | *27.8* | *11.1* | *31.3* | *0.0* |
| முதலியார் | *26.2* | *3.3* | *11.1* | *13.9* |
| வன்னியர் | *14.9* | *8.5* | *21.2* | *6.1* |
| யாதவர் | *10.0* | *20.0* | *0.0* | *14.3* |
| முக்குலத்தோர் | *22.2* | *8.3* | *13.7* | *3.9* |
| நாயுடு, ரெட்டி | *10.0* | *10.0* | *10.0* | *5.0* |
| பிறர் | *20.7* | *8.6* | *21.4* | *8.3* |

## ரசிகர்மன்ற உறுப்பினர் ரீதியாக நடிகர்களின் தனிக்கட்சியில் இணைவு

| தனிக்கட்சி | ரசிகர் மன்ற உறுப்பினர்கள் (%) ரஜினி | விஜயகாந்த் |
|---|---|---|
| ரஜினி | *78.2* | *3.3* |
| விஜயகாந்த் | *5.1* | *66.7* |
| பிற நடிகர்கள் | *2.6* | *0.0* |
| யாருமில்லை | *16.1* | *30.0* |

மேற்கண்ட கணிப்பின்படி, ரஜினி ரசிகர் மன்ற உறுப்பினர்களாக இருப்பவர்களில் *21.8* சதவீதத்தினர் அவர் அரசியலில் தனிக்கட்சி ஆரம்பித்தால் அவரை ஆதரிக்கப்போவதில்லை.

# சாதீய அரசியல்

## எதிர் வரும் தேர்தலில் சாதிக்கட்சிகளுக்கான ஆதரவு

சாதீய அமைப்புக்கள் தமிழக அரசியலில் வளர்ச்சி பெறுவதையும் அரசியல்கட்சிகளாகத் தோற்றம் பெறுவதையும் ஆதரிக்கப் போவதில்லை என *90.5* சதவீதமானோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். வெறும் *9.5* சதவீதம் மட்டுமே சாதீயக்கட்சிகளின் அரசியல் ஈடுபாட்டுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

சாதீய அரசியலை ஆதரிக்கப்போவதில்லை எனவும், சாதீய அமைப்புக்கள் அரசியலில் நுழைவதை எதிர்ப்பதாகவும் *90.5* சதவீதமான வாக்களர்கள் கருத்துக் கூறுவதற்கு, வரும் தேர்தலில் வாக்களிக்கப்போகும் வாக்காளர்கள் எதிர்நோக்கும் அடிப்படை என்ன என்பதைக் காட்டும் அட்டவணையானது இன்னும் வலுவூட்டுவதாக அமைகிறது.

## வாக்களிக்கப்போகும் அடிப்படை

எதிர்வரும் தேர்தலில் கட்சி அடிப்படையிலேயே வாக்களிக்கப்போவதாக 35 சதவீதத்தினரும், வேட்பாளரின் தகுதியைப் பார்த்தே தாம் வாக்களிக்கப்போவதாக 27.3 சதவீதத்தினரும் தெரிவிக்க, சாதீய அடிப்படையில் 2.3 பேரே வாக்களிக்கப்போவதாகக் கூறுகின்றனர்.

| வாக்களிக்கப்போகும் அடிப்படை | வாக்காளர்கள் (%) |
|---|---|
| கட்சிக்காக | 35.0 |
| வேட்பாளரின் தகுதி | 27.3 |
| கொள்கை | 24.8 |
| தேர்தல் சின்னம் | 3.0 |
| சாதி | 2.3 |
| வேறு அடிப்படைகள் | 7.6 |

அதேவேளை – சினிமாவின் செல்வாக்கோடு ஒப்பிடும்போது சாதீயம் பற்றிய உணர்வுகள் வெளிப்படையாகத் தலைதூக்குவதைக் காணலாம். அதாவது– தனது சாதி வேட்பாளருக்கு எதிராக அபிமான நடிகர் போட்டியிட்டால், நடிகரைவிட தனது சாதி வேட்பாளருக்கே வாக்களிக்கப்போவதாக 46.5 % பேர் கூறுவதும் – இது நடிகருக்கே வாக்களிக்கப் போவதாகக் கூறுவோருடன் (46.5%) சமமாக இருப்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

## எதிர் வரும் தேர்தலில் சாதிக்கட்சிகளின் பங்கு

வருகிற சட்டமன்றத் தேர்தலில் சாதிக்கட்சிகள் ஒருசில தொகுதிகள் முதல் கணிசமான தொகுதிகள் வரை வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் சக்திகளாக இருக்கும் என்பது பரவலான கருத்து. இதேவேளை இக்கட்சிகளால் எவ்விதத் தாக்கமும் இருக்காது என 31.3 சதவீதமானோரும் கூறுகின்றனர்.

| கருத்துக்கள் | வாக்காளர்கள் (%) |
|---|---|
| எல்லாத் தொகுதிகளிலும் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் | 10.0 |
| கணிசமான தொகுதிகளில் | 16.7 |
| சில தொகுதிகளில் | 42.0 |
| எந்தத் தாக்கமும் இருக்காது | 31.3 |

## தமிழகத்தில் மிகப் பலமான சாதீயக் கட்சி

தமிழகத்தில் மிகப்பலமான சாதிக் கட்சி பாட்டாளி மக்கள் கட்சியெனவும், அடுத்து விடுதலைச் சிறுத்தைகள் பலமிக்க கட்சியாக இருப்பதாகவும் கருத்துக்கணிப்பில் கூறப்பட்டுள்ளது.

| சாதிக்கட்சிகள் | வாக்காளர்கள் (%) |
|---|---|
| பா.மா.க. | 29.5 |
| விடுதலைச் சிறுத்தைகள் | 5.2 |
| புதிய தமிழகம் | 4.3 |
| மூவேந்தர் முன்னேற்றக் கழகம் | 4.2 |
| புதிய நீதிக்கட்சி | 2.8 |
| மக்கள் தமிழ் தேசம் | 0.4 |
| திராவிட தெலுங்கர் முன்னேற்றக் கழகம் | 0.4 |
| பிற கட்சிகள் | 4.8 |
| இடத்திற்கு இடம் கட்சிகளின் பலம் வேறுபடும் | 11.2 |
| தெரியாது | 37.1 |

## சாதியும் வேட்பாளர்களும்

### எனது சாதிக்காரர் எதிரணி வேட்பாளரானால்...?

தனது தொகுதியில் தனது சாதியைச் சேர்ந்தவர் எதிரணி வேட்பாளராகப் போட்டியிட்டால் அவருக்கு வாக்களிக்க மாட்டோம் என 82.5 சதவீதத்தினர் கூறுகின்றனர்.

| கருத்துக்கள் | வாக்காளர்கள் (%) |
|---|---|
| வாக்களிப்பேன் | *11.2* |
| வாக்களிக்கப்போவதில்லை | *82.5* |
| கருத்துக் கூற விருப்பமில்லை | *6.3* |

### எனது தொகுதியில் சகலரும் எனது சாதி வேட்பாளர்கள்

தனது தொகுதியில் தனது சாதியைச் சேர்ந்தவர்களே வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டால் – நிர்வாகத்திறமை மற்றும் கட்சி இவற்றின் அடிப்படையிலேயே வாக்களிப்பு அமையும் என்பது பெரும்பான்மைக் கருத்தாக உள்ளது.

| ஆதரவின் அடிப்படை | வாக்காளர்கள் (%) |
|---|---|
| நிர்வாகத்திறமை | *47.6* |
| கட்சி | *44.8* |
| நண்பர் | *2.3* |
| உறவினர் | *2.1* |
| ஒரே ஊர் | *1.9* |
| அரசியல் செல்வாக்கு | *1.0* |
| பொருளாதார பலம் | *0.4* |

# அடுத்த தமிழக முதல்வர்

### அடுத்த தமிழக முதல்வராகும் திறமை

அடுத்த தமிழக முதல்வராகும் திறமையாளரின் – முதல் இடத்துக்கான தேர்வாகத் தற்போதைய முதல்வர் கருணாநிதியின் பெயரை 57.4 சதவீதமானோர் தேர்ந்தெடுக்க, இரண்டாவது இடத்தை ஜெயலலிதா 22.3 சதவீத ஆதரவுடன் பெறுகின்றார்.

| | | வாக்காளர்கள் (%) | |
|---|---|---|---|
| பிரமுகர்கள் | திறமை~ முதல் | திறமை ~ 2வது | திறமை ~3வது |
| கருணாநிதி | 57.4 | 17.1 | 9.7 |
| ஜெயலலிதா | 22.3 | 28.1 | 16.8 |

ஏனைய பிரமுகர்களைப் பொறுத்தவரையில் ரஜினிகாந்த், வைகோ ஆகியோர் அடுத்தடுத்த நிலைகளில் உள்ளனர். மேலும் 2–வது, 3–வது தேர்வுகளில் வைகோ முதல் நிலையிலும், மூப்பனார், சிதம்பரம், ஸ்டாலின் ஆகியோர் அடுத்தடுத்த நிலைகளிலும், இவர்களுக்குப் பின் ரஜினியும் உள்ளனர்.

| பிரமுகர்கள் | திறமை~ முதல் | வாக்காளர்கள் (%)<br>திறமை ~ 2வது | திறமை ~3வது |
|---|---|---|---|
| ரஜினிகாந்த் | 4.8 | 6.6 | 10.1 |
| வை.கோ | 4.5 | 15.4 | 12.4 |
| ப.சிதம்பரம் | 3.0 | 6.9 | 10.1 |
| மூப்பனார் | 2.5 | 8.0 | 11.2 |
| திருமாவளவன் | 1.4 | 1.4 | 1.2 |
| டாக்டர்.கிருஷ்ணசாமி | 0.9 | 0.3 | 1.0 |
| விஜயகாந்த் | 0.9 | 1.9 | 3.7 |
| ஸ்டாலின் | 0.6 | 6.6 | 11.2 |
| அன்பழகன் | 0.4 | 3.0 | 2.8 |
| முரசொலி மாறன் | 0.4 | 1.2 | 2.6 |
| டாக்டர்.ராமதாஸ் | 0.3 | 2.0 | 5.9 |
| வேறு | 0.5 | 1.5 | 1.4 |

## அடுத்த தமிழக முதல்வராகும் வெற்றி வாய்ப்பு

அடுத்த தமிழக முதல்வராகும் வெற்றி வாய்ப்பினைப் பொருத்தவரை – கருணாநிதியை 50.9 சதவீதமானோர் தேர்ந்தெடுக்க, இரண்டாவது இடத்தில் ஜெயலலிதா 37.1 சதவீத ஆதரவை பெறுகின்றார்.

| பிரமுகர்கள் | வெ.வா ~ முதல் | வாக்காளர்கள் (%)<br>வெ.வா ~ 2வது | வெ.வா ~3வது |
|---|---|---|---|
| கருணாநிதி | 50.9 | 30.2 | 10.2 |
| ஜெயலலிதா | 37.1 | 32.5 | 14.4 |

ஏனைய பிரமுகர்களைப் பொறுத்தவரையில் வாக்காளர்களின் முதல் தேர்வாக ரஜினி, வைகோ அடுத்தடுத்த நிலைகளிலும், 2–வது, 3–வது தேர்வுகளில் வைகோ, மூப்பனார், ரஜினி, ராமதாஸ், ஸ்டாலின் ஆகியோரும் இடம்பெறுகின்றனர்.

| பிரமுகர்கள் | வெ.வா ~ முதல் | வாக்காளர்கள் (%)<br>வெ.வா ~ 2வது | வெ.வா ~3வது |
|---|---|---|---|
| ரஜினிகாந்த் | 6.4 | 6.2 | 8.6 |
| வை.கோ | 1.8 | 9.5 | 14.1 |
| மூப்பனார் | 0.9 | 7.8 | 18.2 |
| ஸ்டாலின் | 0.6 | 4.6 | 7.5 |
| விஜயகாந்த் | 0.6 | 1.7 | 4.7 |
| ப.சிதம்பரம் | 0.5 | 1.6 | 6.1 |
| டாக்டர்.ராமதாஸ் | 0.3 | 2.3 | 9.9 |
| டாக்டர்.கிருஷ்ணசாமி | 0.3 | 0.3 | 1.1 |
| திருமாவளவன் | 0.2 | 1.0 | 1.7 |
| அன்பழகன் | 0.2 | 0.6 | 1.1 |
| வேறு | 0.4 | 1.2 | 1.1 |

அடுத்த முதல்வராகும் வெற்றிவாய்ப்பில் கருணாநிதிக்கும் ஜெயலலிதாவுக்கும் உள்ள இடைவெளி 13.8 சதவீதமாக காணப்படுகிறது. ஆனால், வரும் தேர்தலில் திமுக, அதிமுக ஆகிய கட்சிகளுக்கிடையிலான வெற்றி

வாய்ப்பு இடைவெளி 2.4 சதவீதமாகவே காணப்படுவது ஆராய்விற்குரியதாகும். அதாவது, ஜெயலலிதா முதல்வராதற்குரிய பாதையில் தடைகளாக – அவர்மீதான தேர்தலில் போட்டியிடத் தடை பற்றிய நீதிமன்ற அறிவிப்பு உட்பட – பல ஊகங்கள் மக்கள் மத்தியில் உலாவுவதே இந்த வேறுபாட்டிற்குரிய காரணமாகும்.

## அடுத்த வாரிசுகள்

தமிழகக் கட்சிகளிடையே அந்தந்தக் கட்சிக்குள் அடுத்த தலைமைக்குத் தகுதி பற்றிய கணிப்பில் – தி.மு.க.வில் ஸ்டாலினும், ம.தி.மு.க.வில் செஞ்சி ராமச்சந்திரனும், த.மா.கா.வில் ப.சிதம்பரமும், பா.ம.க.வில் அன்புமணியும், அ.தி.மு.கவில் தினகரன், சுதாகரன், சசிகலா ஆகிய மூவரையும் உள்ளடக்கிய சசிகலா குடுபத்தினரும் இடம் பெறுகின்றனர்.

### தி.மு.க. வாரிசு

| | வாக்காளர்கள் (%) |
|---|---|
| ஸ்டாலின் | – 49.2 |
| அன்பழகன் | – 17.8 |
| பிறர் | – 5.2 |
| இல்லை/தெரியாது | – 27.8 |

தி.மு.க.வைப் பொறுத்தவரையில் அடுத்த தலைமைபற்றி தெளிவான நிலை உள்ளது. தி.மு.க. உறுப்பினர்களின் கருத்துக்களை ஒத்ததாகவே கட்சி சாராதவர்களின் கருத்துக்களும் இருப்பது குறிப்பிடத்தக்கது. இதனை கீழ்வரும் அட்டவணையில் உள்ள கட்சி சாராதவர்களின் தெரிவு உறுதியாக்குகிறது.

| | வாக்காளர்கள் (%) | |
|---|---|---|
| | ஸ்டாலின் | அன்பழகன் |
| திமுக உறுப்பினர்கள் | 54.2 | 23.8 |
| கட்சி சாராதவர்கள் | 48.3 | 15.6 |

### அ.தி.மு.க. வாரிசு

| | வாக்காளர்கள் (%) |
|---|---|
| சசிகலா குடும்பம் | – 19.1 |
| காளிமுத்து | – 5.8 |
| பிறர் | – 6.1 |
| இல்லை/தெரியாது | – 68.9 |

அ.தி.மு.க.வில் அடுத்த தலைமைக்குப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதை இதன் மூலம் அறியலாம். இரண்டாம் கட்டத் தலைவர்கள் இல்லாததால் ஜெயலலிதாவிற்குப் பின்னர் கட்சியின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளதாகப் பலரும் தெரிவித்துள்ளனர். இதனை கட்சி உறுப்பினர்கள் மட்டுமல்ல கட்சி சாராதவர்களும் வெளிப்படுத்துவதை கீழேயுள்ள அட்டவணையில் காணலாம்.

| | வாக்காளர்கள் (%) | |
|---|---|---|
| | சசிகலா குடும்பம் | காளிமுத்து |
| அதிமுக உறுப்பினர்கள் | 20.9 | 9.4 |
| கட்சி சாராதவர்கள் | 16.9 | 5.3 |

**ம.தி.மு.க.**

| | வாக்காளர்கள் (%) |
|---|---|
| செஞ்சி ராமச்சந்திரன் | – 5.8 |
| கண்ணப்பன் | – 2.9 |
| பிறர் | – 5.6 |
| இல்லை/தெரியாது | – 85.7 |

**த.மா.கா.**

| | வாக்காளர்கள் (%) |
|---|---|
| ப.சிதம்பரம் | – 29.7 |
| பீட்டர் அல்போன்ஸ் | – 1.2 |
| பிறர் | – 3.8 |
| இல்லை/தெரியாது | – 65.3 |

**பா.ம.க.**

| | வாக்காளர்கள் (%) |
|---|---|
| அன்புமணி | – 21.1 |
| ஜி.கே.மணி | – 0.6 |
| பிறர் | – 2.9 |
| இல்லை/தெரியாது | – 75.4 |

# முத்தாய்ப்பாய்ச் சில முடிவுகள்

01) தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களையும் தழுவியதாக, ஆளும் கட்சியின் மீது ஏமாற்றம் நிலவுகிறது. அரசின் திட்டங்கள் பற்றிய செய்தி பரவலாகப் போய்ச் சேர்ந்திருந்தாலும், அவற்றின் பயன் எல்லாத் தரப்பு மக்களுக்கும் சம அளவில் கிடைக்கவில்லை என்ற எண்ணம் மேலோங்கியுள்ளது. என்றாலும், அக் கட்சிக்கு எதிரான அலையாக உருவெடுக்கும் அளவு தீவிரமாக இல்லை. தற்போதுள்ள சமூக–அரசியல் சூழலே நீடித்தால், வரும் தேர்தலில் எதை நோக்கியும் எந்த விதமான அலையும் வீசுவதற்கான சாத்தியம் எதுவும் இல்லை.

02) கடந்த 1996 தேர்தலோடு ஒப்பிடும்போது, ஆளும் கட்சி பேரளவு சரிவுக்கு ஆளாகியுள்ளது. இது பிரதான எதிர்க்கட்சியாகிய அ.தி.மு.க.வுக்குப் பெருமளவு சாதகமாக அமைந்துள்ளது. பாரதீய ஜனதா முன்பைவிடத் தனது தளத்தை விரிவுபடுத்தியுள்ளது. தற்போது பெரும் இழப்புக்கு ஆளாகியிருப்பது த.மா.கா.

03) அரசியல்வாதிகள் மேலுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்கள் வரும் தேர்தலில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதையும் விளைவிக்காது. மாறாக, அ.தி.மு.க. அரசியல்வாதிகள் மேலுள்ள குற்றச்சாட்டுக்களைப் பெரிதுபடுத்தித் தி.மு.க.வின் பிரச்சாரம் அமைந்தால் அது அ.தி.மு.க.வுக்குச் சாதகமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தும்.

04) அடுத்து அமையப்போகும் ஆட்சி கூட்டணி ஆட்சியாகவே (coalition government) அமையும். தற்போதுள்ள கூட்டணிச் சூழலில் எந்தக் கட்சியும் தனித்து ஆட்சி அமைப்பது சாத்தியமில்லை. பெருவாரியான வாக்காளர்கள் தற்போதுள்ள கூட்டணி அமைப்பையே பெரிதும் ஆதரிக்கிறார்கள்.

05) அ.தி.மு.க.வை விடச் சற்று அதிக ஆதரவுடன் தி.மு.க. முன்னணியில் இருப்பதாகத் தெரிந்தாலும், மக்களின் எண்ணப்போக்குகளை ஆராயும்போது அ.தி.மு.க.வுக்குச் சாதகமான சூழல் நிலவுகிறது. அந்தக் கட்சியின் பிரச்சார மற்றும் கூட்டணி உத்திகளைப் பொருத்து, இச் சாதகமான சூழல் வாக்குகளாக வடிவம் பெறும் அல்லது பெறாமல் போகும்.

06) சாதி அடிப்படையிலான கட்சிகள் கணிசமான தொகுதிகளில் வெற்றி–தோல்வியை நிர்ணயிக்கும் சக்தியாகத் திகழும். எந்தக் கூட்டணியில் இந்தக் கட்சிகள் அதிக எண்ணிக்கையில் இடம் பெறுகின்றனவோ அந்தக் கூட்டணி அதிக இடங்களைக் கைப்பற்றும்.

07) நடிகர்களுக்கு ரசிகர்கள் கணிசமாக இருந்தாலும், தேர்தல் வாக்கு விகிதத்தில் எந்தக் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கும் நடிகர்கள் வழிவகுக்க முடியாது. மிகப் பிரபலமான நடிகராகத் திகழும் ரஜினிகாந்த் முதல்வராவதற்கான திறமையிலும் வெற்றிவாய்ப்பிலும் மிகமிகப் பின்தங்கியே இருக்கிறார். அவர் ஒருவேளை தனிக் கட்சி தொடங்கினால் அதன் பாதிப்பு தி.மு.க.வில் கணிசமாக இருக்கும்.

08) மக்களின் உணர்வுகளையும் எண்ணங்களையும் ஒருங்கிணைத்து, அவர்களது வாக்களிக்கும் விதத்தோடு பிற காரணிகளையும் ஒப்புநோக்கினால், தற்போதுள்ள கூட்டணியே வரும் தேர்தல்வரை நீடித்தால்,

| | |
|---|---|
| தி.மு.க. கூட்டணிக்கு | 100 முதல் 110 இடங்கள் |
| அ.தி.மு.க. கூட்டணிக்கு | 90 முதல் 100 இடங்கள் |
| பிற – குறிப்பாகச் சாதி அடிப்படையிலான – கட்சிகள் தீர்மானிப்பவை | 30 முதல் 40 இடங்கள் |

எனக் கணிக்க முடிகிறது. எந்தக் கூட்டணி ஆட்சி அமைக்கும் என்பது, எந்தக் கூட்டணி அதிக எண்ணிக்கையில் பிற – குறிப்பாகச் சாதி அடிப்படையிலான – கட்சிகளின் ஆதரவைப் பெற்றுள்ளது என்பதைப் பொருத்து அமையும்.

பண்பாடு~மக்கள் தொடர்பகம்
லொயோலாக் கல்லூரி வளாகம்
சென்னை 600 034
தொ.பே: 8222558, 8260292 தொ.ந:8226260
மின் அஞ்சல்: tmsraj@vsnl.com